**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 511/2025**
**வழக்கு சாட்சி PW-6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கலா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஆறுமுகம் | தொழில் | : | குடும்ப பொறுப்பு |
| கிராமம் | : | ஏ.பி.நாடானூர் | வயது | : | 53 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Saturday of 04.07.2026.

**(3ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் ஏ.பி.நாடானூரில் குடியிருந்து வருகிறேன். நான் குடும்ப பொறுப்பு வகித்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1 சுந்தரராஜ் என்பவரை எனக்கு தெரியாது. 05.08.2022 அன்று நான் கந்தவேல் மினி பஸ்சில் கடையத்திலிருந்து எங்கள் ஊருக்கு வந்து கொண்டிருந்தேன். செல்லப்பிள்ளையார்குளம், ஏ.பி.நாடானூர் பிரிவில் பஸ் வரும்போது, இரவு 07.40 மணியிருக்கும். யாரோ சில நபர்கள் கல்லால் பஸ்சின் முன்புறமும், பின்புறமும் எறிந்தார்கள். யார் எறிந்தார்கள் என்று நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.06 16:14:12 +0530